1971 ஜூலை 23]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தக் கடிதப் போக்குவரத்து மூலமாக ஏற்படுத்துகின்ற பட்டப் படிப்புக்கு ஃபீஸ் அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதைப் பற்றிப் புனர் பரிசீலனை செய்து ஃபீஸைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பல்கலைக் கழகந்தான் இதை வகுத்திருக்கிறார்கள். அதற்காகும் செலவு மற்றவைகளை எல்லாம் கணக்கில் எடுத்து முறைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். கடிதப் போக்குவரத்து முறையில் பாடங்களை எல்லாம் அச்சடித்துப் புத்தக வடிவில் அனுப்புவதற்கு ஆகும் பெருஞ் செலவு எல்லாவற்றையும் கணக்கில் கொண்டு பல்கலைக் கழகம் அதை நிர்ணயித்திருக்கிறது.

டெலிவிஷன் மூலம் கல்வி

* 389 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் டெலிவிஷன் மூலம் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

செஞ்சிக் கோட்டையைப் புதுப்பித்தல்

* 390 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சிக் கோட்டை பழுதடைந்திருப்பதால் அதைப் புதுப்பிக்க மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : செஞ்சிக்கோட்டை தேசிங்குராஜன் ஆண்ட பழைய வரலாற்றைக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. அந்தக் கோட்டையில் இப்போது மத்திய சர்க்கார் பணியாளர்களைப் போட்டு உள்ளே செல்லுகின்றவர்களுக்குக் கட்டணம் வசூலிக்கிறார்கள். பண்டைக் காலத்து வரலாற்றைக் காட்டும் வகையில் அமைந்திருக்கின்ற அந்தக் கோட்டையைப் புதுப்பித்து பயணிகள் தங்கும் அளவுக்கு ஒரு சுற்றுலா மாளிகை அமைப்பதற்கு மத்திய சர்க்காரை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : செஞ்சிக் கோட்டையை மத்திய அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் கண்காணித்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழுதடைந்ததைப் புதுப்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதைப்பற்றி மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டதில் அந்தக் கோட்டை பழுதடையவில்லை யென்றும் அது ஓரளவு நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது

என்றும் பதில் அளித்திருக்கிறூர்கள். அந்தக் கோட்டையைத் தற்காலத்திற்கேற்றவாறு புதுப்பித்துவிட்டால் பழமையின் தன்மை மறைந்துவிடும். பழுது ஏற்படுவதைத் தற்போது அவர்களே பராமரித்து வருகிறூர்கள். அதைப் பாதுகாக்கும் முழுப் பொறுப்பையும் மத்திய அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் மேற்கொண்டிருக்கிறூர்கள்.

திருமலை நாயக்கர் மகாலில் கலைக்கூடம்

* 391. வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மதுரை திருமலை நாயக்கர் மகாலில் கலைக்கூடம் ஒன்று துவக்க அரசு பரிசீலனை செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : திருமலை நாயக்கர் மகால் நம்முடைய பண்டையக் கட்டடக் கலைக்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது. வெளிநாட்டவர் கூட மெச்சத் தகுந்த விதத்தில் அமைந்திருக்கிறது. வெளிநாட்டவரைக் கவரக்கூடிய விதத்தில் அங்கு கலைக்கூடம் ஒன்று ஏற்படுத்துவதோடு திருமலை நாயக்கர் மகாலில் இருந்து சுரங்கப் பாதை மதுரை நகரத்தின் பல பகுதிகளுக்குச் செல்லுவதாகச் சொல்லப்படுவது பற்றியும் ஆராய்ச்சி செய்து சரித்திரச் சான்றுகளை வெளிப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திருமலை நாயக்கர் மகாலைப் பொறுத்தவரை அரசாங்கத்திடம் அப்பேர்ப்பட்ட செயற் குறிப்பு இல்லை. திருமலை நாயக்கர் மகால் தென்னக மாநிலங்களில் இருக்கும் அரண்மனைகளில் கட்டடக் கலைச் சிறப்போடு அமைந்த கூடமாக இருந்து வருகிறது. அதை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதைப்பற்றி சுற்றுலாக் குழுவினர் ஆலோசனை செய்து வருகிறூர்கள். கலைக் கூடம் ஏற்படுத்தலாம், சிறுவர் பூங்கா வைக்கலாம், நூல் நிலையம் அமைக்கலாம் என்ற யோசனை இருந்து வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே சுற்றுலாக் குழுத் தலைவராகவும் இருப்பதால் தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்குத் தெரிவித்து, தொல்பொருள் ஆராய்ச்சி இயக்குநர் இதுபற்றிப் பரிசீலித்து மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து உரையாடி இருக்கிறூர்கள். திருமலை நாயக்கர் மகாலின் பழமையும், அழகும் கெடாதவாறு எப்படி அமைக்கலாம் என்று அவர்கள் ஆராய்ந்து முடிவு செய்த பிறகு அரசு மேற்கொண்டு நடவடிக்கையை மேற்கொள்ளும்.

திரு. பெ. மலைச்சாமி : நாயக்க மன்னர்கள் பாண்டி மண்டலத்தை ஆண்ட நேரத்தில் பல்வேறு சிலைகளையும், சிற்பங்களையும் செய்திருக்கிறூர்கள். அந்தச் சிலைகள் அந்த மாவட்டம் முழுவதும் சீர்கெட்ட நிலையில் இருக்கின்றன. அவற்றை அரசு சேர்த்து இந்தத் திருமலை நாயக்கர் மகாலில் வைக்க முன் வருமா?